கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,

ஸ்ரீவில்லிபுத்தூர்.

**IP. No: 3/2021** **நாள்: 08.06.2026**

**மசா.1, திரு.முத்துபிரகாசன்**

**மசா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 10ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

என் தாயார் பெயர் சண்முகப்பிரியா. என் தகப்பனார் பெயர் முருகேசன். என் தகப்பனார் உயிருடன் இருந்த போது இந்திய ராணுவத்தில் நாயக்காக பணிபுரிந்தார். அவர் ஒய்வு பெற்ற பின்பு தனியார் நிறுவனத்தில் செக்யூரிட்டியாக வேலை பார்த்து வந்தார். நானும், என் தம்பியும் மாட்டுப்பண்ணையை வைத்திருந்தோம். தாவா சொத்தானதை என் தகப்பனார் கிரையம் வாங்கியது. 2001ம் ஆண்டு என் தகப்பனார் கிரையம் வாங்கினார். என் தகப்பனார் 2013ம் ஆண்டு இறந்துபோனார் . என் தகப்பனார் இறந்த பின்பு தான் நாங்கள் மாட்டுப்பண்ணையை வைத்திருந்தோம். மாட்டுப்பண்ணைக்காக வேண்டி தனியார் நிறுவனத்தில் இருந்து ரூ.23 லட்சத்தை கடனாக வாங்கியிருந்தோம்.அந்த கடனுக்கு ஈடாக இந்த தாவா சொத்தை நாங்கள் தனியார் நிறுவனத்தில் அடமானம் வைத்திருந்தோம். அந்த அடமானம் நிலுவையில் இருந்த போது நானும், என் தாயாரும், என் தம்பியும் தாவா சொத்தானதை இம்மனுவில் உள்ள 10ம் எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுக்க ஒப்புக்கொண்டோம். அது சம்மந்தமாக நாங்களும் 10ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் . அந்த கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சொத்தின் மொத்த மதிப்பு தொகை ரூ.45 லட்சமாக காண்பித்திருந்தோம். அந்த கிரைய தொகையில் முன்பணம் தொகையாக ரூ.12 லட்சத்தை கிரைய ஒப்பந்த தேதியிலேயே 10ம் எதிர்மனுதாரரிடமிருந்து நாங்கள் வாங்கிக்கொண்டோம். அந்த ஒப்பந்தத்தில் மீதி அடமான தொகையை நாங்களே தனியார் நிறுவனத்தில் செலுத்தி கடனை மீட்டுக்கொள்வது என்று சொல்லப்பட்டுள்ளதா என்று கேட்டால் அப்படி சொல்லப்படவில்லை மனுவில் உள்ள 10ம் எதிர்மனுதாரரே அடமான கடன் தொகையை தனியார் நிறுவனத்தில் செலுத்தி அடமான கடனை மீட்டுக்கொள்வது என்று தான் உள்ளது . அந்த கிரைய ஒப்பந்த ஆவணத்தை பார்த்தால் அடமான கடன் பாக்கி தொகையை யார் செலுத்தி அடமான கடனை மீட்டுக்கொள்ளவது என்று தெரியும் என்று சொன்னால் அது சரிதான். அடமான கடன் தொகையை நாங்கள் தான் மீட்டி 10ம் எதிர்மனுதாரரிடமிருந்து மீதி கிரைய தொகையை பெற்றுக்கொண்டு கிரைய பத்திரத்தை எழுதிக்கொடுக்க வேண்டி 10ம் எதிர்மனுதாரர் எங்களிடம் பல முறை கேட்டும் நாங்கள் தான் கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க முன்வரவில்லை என்றால் அது பொய். அதனால் 10ம் எதிர்மனுதாரர் எனக்கு எதிராகவும் , என் தம்பிக்கு எதிராகவம், என் தாயாருக்கு எதிராகவும் ஸ்ரீவில்லிபுத்தூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.9/2020 என்று வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்று

அந்த வழக்கானது தற்போது வரையிலும் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் அது சரிதான். அதற்கான பிராது நகல் தான் என்னிடத்தில் காண்பிக்கப்படுபவை என்று சொன்னால் அது சரிதான். அதில் உள்ள 4ம் எதிர்வாதியான லட்சுமணசங்கருக்கு நாங்கள் வழக்கு நிலுவையில் இருந்தபோது இந்த வழக்குரை சொத்தை கிரையமாக செய்து கொடுத்துவிட்டோம் என்று சொன்னால் வழக்கை தாக்கல் செய்து கொள்வதற்கு முன்பாக நாங்கள் இந்த வழக்குரை சொத்தை 4ம் எதிர்வாதியான லட்சுமணசங்கருக்கு கிரையமாக எழுதிக்கொடுத்துவிட்டோம். மேற்படி பிராதின் அலுவலக நகல் **எ.ம.சா.ஆ.1**.மீதி கிரைய தொகையை செலுத்தி கிரையத்தை 3 மாதத்திற்குள் முடித்துக்கொள்வதாக சொல்லி நாங்கள் 10ம் எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு எதுவும் அனுப்பிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். ஆனால் 10ம் எ திர்மனுதாரர் ஆனவர் மீதி கிரைய தொகையை எங்களிடம் செலுத்தி கிரைய பத்திரத்தை முடித்துக்கொள்ள தயாராகவும் விருப்பத்துடனும் இருப்பதாக சொல்லி எங்களுக்கு அவர் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பை அனுப்பியிருந்தார் என்றால் எங்களுக்கு அப்படி அறிவிப்பு எதுவும் வரவில்லை. நாங்கள் மேற்படி அடமான கடனை செலுத்தி அடமானத்தை மீட்டி அதன் பின்பு அ.வ.எண்.9/2020ல் உள்ள 4ம் எதிர்வாதியான இலட்சுமணசங்கருக்கு நாங்கள் கிரையம் செய்து கொடுத்த பின்பு தான் அ.வ.எண்.9/2020 என்பதை தாக்கல் செய்யப்பட்டதா என்று கேட்டால் சரிதான். வழக்கை தாக்கல் செய்த பின்பு அந்த அ.வ.எண்.9/2020ல் உள்ள வாதியான இம்மனுவில் உள்ள 10ம் எதிர்மனுதாரரான தமிழ்செல்வி என்பவர் அசல் வழக்கானதை சமரசம் பேசிக்கொள்ள மத்தியஸ்தம் செய்து கொள்ள மீடியேசனுக்கு அனுப்பப்பட்டதா என்று கேட்டால் அனுப்பப்பட்டது. மீடியேசனில் எங்களை வைத்து பேசப்பட்ட போது வாதியிடமிருந்து மீதம் உள்ள கிரைய தொகையை பெற்றுச்கொண்டு தனியார் நிறுவனத்தில் அடமான கடனை மீட்டி அதன் பின்பு வழக்கின் வாதியான தமிழ்செல்வி பெயருக்கு கிரைய பத்திரம் முடித்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு மீடியேசனில் நிலுவையில் இருந்த போது அ.வ.எண்.9/2020ல் 4ம் எதிர்வாதியான லட்சுமண சங்கர் என்பவர் வாதி வீட்டிற்கு சென்று தான் கிரையம் பெற விருப்பம் இருப்பதாகவும் வாதி கிரையம் பெற கூடாது என்று மிரட்டியதால் மீடியேசனில் ஒப்புக்கொண்ட படி வாதியால் கிரையம் செய்து கொள்ளமுடியவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. அதன் பிறகு அசல் வழக்கில் உள்ள 4ம் எதிர்வாதியானவர் 5ம் எதிர்வா்திக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 4ம் எதிர்வாதிக்கு நாங்கள் 06.03.2020ம் தேதியில் கிரையம் செய்து கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். அதன் பின்பு தான் நாங்கள் இந்த IP. 3/2021 என்ற மனுவை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். 06.03.2020ம் தேதியிலேயே நாங்கள் கிரையம் செய்து கொடுத்துவிட்டு 2 ஆண்டு காலத்திற்குள் IP.3/2021யை நாங்கள் தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் அப்படியில்லை. லட்சுமண சங்கருக்கு நாங்கள் தொகை ரூ.36 லட்சத்திற்கு கிரையமாக செய்துகொடுத்தோம். தனியார் நிறுவனத்தில் அடமான நிலுவை தொகை

ரூ.23 லட்சம் 50 ஆயிரம் இருந்தது.பாக்கி தொகை எங்கள் கை வசம் தான் இருந்தது என்று சொன்னால் அப்படியில்லை. மீதம் உள்ள தொகை யார் வசம் உள்ளது என்று கேட்டால் லட்சுமண சங்கர் வசம் உள்ளது. அந்த தொகையை நாங்கள் இதுநாள் வரையிலும் அவரிடமிருந்து கேட்கவில்லையா என்று கேட்டால் நாங்கள் அவர்களிடமிருந்து ஏற்கனவே வாங்கியிருந்த கடன் தொகைக்கு அவர் தொகையை வைத்துக்கொண்டார் நாங்கள் அவரிடமிருந்து ரூ .5 லட்சத்தை தான் கடனாக வாங்கியிருந்தோம். மீதம் உள்ள தொகை என்னவானது என்று கேட்டால் இம்மனுவில் உள்ள 10ம் எதிர்மனுதாரரிடம் கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாகவே அந்த வீட்டை பொறுத்து ஒரு ஒத்தி கடன் தொகை இருந்தது. அந்த ஒத்திதாரர் பெயர் பூங்கொடி. மேற்படி பூங்கொடியிடம் நாங்கள் அந்த வீட்டை ஒத்திக்கு வைத்திருந்தோம் என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தை நாங்கள் தாக்கல் செய்யவில்லை. மேற்படி விபரத்தை கிரைய ஒப்பந்தத்திலேயோ , அ.வ.எண்.9/2020ல் நாங்கள் தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரையிலும், தாவா IP.3/2021 மனுவிலும் இதற்கு தாக்கல் செய்துள்ள நிருபண அபிடவிட்டிலும் நாங்கள் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். காரணம் மீதம் உள்ள தொகை எங்கள் கைவசம் தான் உள்ளது என்றும் கடன் தொகையை செலுத்தாமல் இருந்துகொள்ள வேண்டி என்று சொன்னால் அது சரியல்ல. நானும், என் தம்பியும் சேர்ந்து பர்னிச்சர் கடையை வைத்துள்ளோம். 4ம் எதிர்வாதிக்கு நாங்கள் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் இன்ன இன்ன கடன்களை அடைப்பதற்காக வேண்டி நாங்கள் கிரைய பத்திரமாக எழுதிக்கொடுப்பதாக அதில் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். தாவா மனு நிலுவையில் உள்ள போது அசல்வழக்கு எண்.9/2020 உள்ள 6ம் எதிர்வாதியான Sale Tax அலுவலகதிற்கு செலுத்த வேண்டிய பாக்கி வரி தொகையான ரூ.5,25,50,362 யை தாவா சொத்தை ஜப்தி செய்துள்ளார் என்று சொன்னால் அப்படி எதுவும் இல்லை. என்னிடம் காட்டப்படுமங்சொத்து தொடர்பான வில்லங்க சான்றிதழின் கணினி நகல் என்றால் சரிதான். அது **எ.ம.சா.ஆ.2** . அதில் தாவா அசல் வழக்கு எண்.9/2020ல் உள்ள 4ம் எதிர்வாதியானவர் 5ம் எதிர்வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த விபரமும், அது போல் நீதிமன்ற உத்தரவு படி 09.07.2024ம் தேதியில் மேற்படி State Tax Officer at Srivilliputtur மற்றும் TVL Sri Royal Electrical S.Prabhuram என்பவர் பெயருக்கு எ ழுதித்கொடுத்துள்ளதாக வில்லங்கத்தில் துலங்குகிறது என்றால் சரிதான். நாங்கள் நடத்தி வரும் பர்னிச்சர் கடையின் பெயர் ஸ்ரீ சாய் பர்னிச்சர்ஸ் என்பதாகும். ராயல் எலெக்ட்ரிக்கல்ஸ் கடையை நாங்கள் நடத்திவரவில்லை. நாங்கள் செய்து கொடுத்த கிரையமானது நல்ல எண்ணத்தின் பெயரில் இல்லை என்றும் அ.வ.எண்.9/2020ல் உள்ள வாதியான தமிழ்செல்வி , இம்மனுவில் உள்ள அவர் 10ம் எதிர்மனுதாரராக உள்ளவருக்கு கடன் தொகையை செலுத்திக்கொள்ளாமல் இருந்துகொள்ள வேண்டியும் மீதி பணத்தை செலுத்தி கிரைய பத்திரத்தை முடித்துகொள்ளாமல் இருந்துகொள்ள வேண்டி எங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றால்

அப்படியில்லை. எனவே எங்களுக்கு போதிய வசதியும், வருமானமும், பணமும் கையிருப்பில் உள்ளது என்றும் 10ம் எதிர்மனுதாரரை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் தவறாக இந்த மனுவை தாக்கல் செய்திருந்தோம் என்றால் அது சரியல்ல. எனவே நாங்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் அது சரியல்ல.

**(குறுக்கு விசாரணை 11ம் எதிர்மனுதாரர் தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 08th day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.